# வேளாண் அறிவியல் நிலையம்

## MYRADA, ஈரோடு மாவட்டம்



# வாசனை மற்றும் நறுமணப் பயிர் சாகுபடி தொழில்நுட்பம்

## பயிர் வளர்ப்பு வழிகாட்டி

முனைவர். பெ. அழகேசன், ப. பச்சியப்பன், மு. திருமூர்த்தி, முனைவர். A. பாஸ்கரன், முனைவர். ஷேக் N. மீரா

**MYRADA - வேளாண் அறிவியல் நிலையம்**

272, பெருமாள் நகர், புதுவள்ளியம்பாளையம் (வழி), கலிங்கியம் (அஞ்),
கோபிசெட்டிபாளையம், ஈரோடு மாவட்டம் – 638 453. தமிழ்நாடு

Phone : 94860 77454 | http://www.myradakvk.org | http://atari-hyderabad.org.in/

| பொதுப்பெயர் : | அறிவியல் பெயர் : | குடும்பம் : |
|---|---|---|
| **ஜாதிக்காய்** | **மிரிஸ்டிகா ப்ரகிரன்ஸ்** | **மிரிஸ்டேசியே** |

**மண் மற்றும் தட்பவெப்ப நிலை** : நல்ல வடிகால் வசதி கொண்ட செம்மண் மற்றும் களிமண் வகை உகந்தது 20° - 30° செல்சியஸ் வெப்பநிலை உள்ள பகுதிகளில் நன்கு வளரும்

**மழையளவு** : 1500 - 2500 மி.மீ

**பருவம்** : ஜுன் - ஜுலை

**நடவுக்குழி அளவு** : 60 செ.மீ நீளம், 60 செ.மீ. அகலம், 60 செ.மீ ஆழம்

**நடவுக்குழி தயார் செய்தல்** : 10 கிலோ தொழு உரத்துடன் 50 கிராம் அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போ பாக்டீரியத்தை கலந்து இட்டு குழியின் மத்தியில் நாற்றினை நடவு செய்ய வேண்டும்

**இடைவெளி** : 8 x 8 மீட்டர்

**ஊட்டச்சத்து மேலாண்மை**

(பரிந்துரைக்கப்பட்ட உரங்களை இரு சம பாகமாக பிரித்து மே - ஜுன் மற்றும் நவம்பர் - டிசம்பர் மாதங்களில் இட வேண்டும்.)

| வயது | கிராம் / மரம் | | |
|---|---|---|---|
| | தழை | மணி | சாம்பல் |
| ஒரு வருட நாற்றுக்கு | 20 | 20 | 60 |
| நன்கு முதிர்ந்த மரங்களுக்கு | 300 | 300 | 960 |



**நீர் நிர்வாகம்** : கோடை காலங்களில் 5 - 7 நாட்களுக்கு ஒருமுறை நீர் பாய்ச்சுதல் அவசியமாகும்.

**ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு** : ஜாதிக்காயினை பூச்சிகளும், நோய்களும் தாக்குதல் குறைவு. லொராதன்ஸ் என்னும் ஒட்டுண்ணிச் செடியினால் ஜாதிக்காய் மரத்தின் வளர்ச்சி பாதிக்கப்படும். இதை கட்டுப்படுத்த ஒட்டுண்ணிச் செடியை வெட்டி அகற்ற வேண்டும்.

**அறுவடை** : மரம் நட்ட 6 - 7 ஆண்டுகளில் பலன் கொடுக்க ஆரம்பிக்கும்.

**மகசூல்** : மரம் ஒன்றிற்கு : காய்கள் 1000 - 2000 எண்கள்
உலர்ந்த ஜாதிக்காய் கொட்டை 5 - 7 கிலோ
ஜாதிப் பத்திரி 0.5 - 07 கிலோ கிடைக்கும்.

| பொதுப்பெயர் : | அறிவியல் பெயர் : | குடும்பம் : |
|---|---|---|
| **இலவங்கப் பட்டை** | **சின்னமோமம் ஜெய்லெனிகம்** | **லாரேசியே** |

**மண் மற்றும் தட்பவெப்ப நிலை** : ஆழமான மணல் கலந்த வடிகால் வசதியுடைய நிலம் ஏற்புடையது
$20^{0}$ - $30^{0}$ செல்சியஸ் வெப்பநிலை உள்ள பகுதிகளில் நன்கு வளரும்

**மழையளவு** : 1500 – 2500 மி.மீ

**பருவம்** : ஜுன் – டிசம்பர்

**நடவுக்குழி அளவு** : 50 செ.மீ நீளம், 50 செ.மீ. அகலம், 50 செ.மீ ஆழம்

**நடவுக்குழி தயார் செய்தல்** : 10 கிலோ தொழு உரத்துடன் 50 கிராம் அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போ பாக்டீரியத்தை கலந்து இட்டு குழியின் மத்தியில் நாற்றினை நடவு செய்ய வேண்டும்.

**இடைவெளி** : 3 x 3 மீட்டர்



## ஊட்டச்சத்து மேலாண்மை

(பரிந்துரைக்கப்பட்ட உரங்களை இரு சம பாகமாக பிரித்து
மே – ஜுன் மற்றும் நவம்பர் – டிசம்பர் மாதங்களில் இட வேண்டும்

| உரங்கள் | முதல் வருடம் | ஒவ்வொருவருடமும் அதிகப்படுத்தப்பட வேண்டிய உர அளவு | 10 வருடம் முதல் |
|---|---|---|---|
| தொழு உரம் | 1 கிலோ | 2 கிலோ | 20 கிலோ |
| தழை | 20 கிராம் | 20 கிராம் | 200 கிராம் |
| மணி | 18 கிராம் | 18 கிராம் | 180 கிராம் |
| சாம்பல் | 25 கிராம் | 25 கிராம் | 250 கிராம் |

**நீர் நிர்வாகம்** : கோடை காலங்களில் 5 – 7 நாட்களுக்கு ஒருமுறை நீர் பாய்ச்சுதல் அவசியமாகும்.

**ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு** : தண்டு துளைப்பான் மற்றும் சிகப்பு துளைப்பான் : பிவேரியா பேசியானா 100 கிராமை 10 லிட்டர் தண்ணீருடன் கலந்து தெளிக்கவும்.

இலைப்புள்ளி நோய் : சூடோமோனஸ் புளுரசன்ஸ் 100 கிராமை 10 லிட்டர் தண்ணீருடன் கலந்து தெளிக்கவும்.

**அறுவடை** : 4 - 5 வருடத்திற்குள் பலன் கொடுக்கும். மே மாதத்தில் ஒரு முறையும் நவம்பர் மாதத்தில் ஒரு முறையும் பட்டையை உரித்து எடுக்க வேண்டும். உரித்த பட்டைகளை 2 - 5 நாட்களுக்குள் உலர்த்தி சேமிக்கலாம்

**மகசூல்** : ஒரு செடியில் 100 கிராம் உலர்ந்த பட்டை கிடைக்கும். ஏக்கருக்கு 14-15 கிலோ இலவங்க எண்ணெய் கிடைக்கும்.

| பொதுப்பெயர் : | அறிவியல் பெயர் : | குடும்பம் : |
|---|---|---|
| **கிராம்பு** | **சிஜியம் அரோமேட்டிகம்** | **மிரிஸ்டேசியே** |

**மண் மற்றும் தட்பவெப்ப நிலை** : நல்ல வடிகால் வசதி கொண்ட மணல் கலந்த செம்மண் மற்றும் களிமண் வகை உகந்தது $20^{0}$ - $30^{0}$ செல்சியஸ் வெப்பநிலை உள்ள பகுதிகளில் நன்கு வளரும்

**மழையளவு** : 1500 - 2500 மி.மீ

**பருவம்** : ஜுன் - டிசம்பர்

**நடவுக்குழி அளவு** : 30 செ.மீ நீளம், 30 செ.மீ. அகலம், 30 செ.மீ ஆழம்

**நடவுக்குழி தயார் செய்தல்** : 10 கிலோ தொழு உரத்துடன் 50 கிராம் அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போ பாக்டீரியத்தை கலந்து இட்டு குழியின் மத்தியில் நாற்றினை நடவு செய்ய வேண்டும்.

**இடைவெளி** : 6 x 6 மீட்டர்

## ஊட்டச்சத்து மேலாண்மை

(பரிந்துரைக்கப்பட்ட உரங்களை இரு சம பாகமாக பிரித்து மே - ஜுன் மற்றும் நவம்பர் - டிசம்பர் மாதங்களில் இட வேண்டும்

| வயது | கிராம் / மரம் | | |
|---|---|---|---|
| | தழை | மணி | சாம்பல் |
| ஒரு வருட நாற்றுக்கு | 20 | 20 | 60 |
| நன்கு முதிர்ந்த மரங்களுக்கு | 300 | 300 | 960 |



**நீர் நிர்வாகம்** : ஒரு நாளைக்கு 8 லிட்டர் நீர் தேவைப்படும், கோடை காலங்களில் நீர் பாய்ச்சுதல் அவசியமாகும்.

**ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு** : தண்டு துளைப்பான் : பிவோயா பேசியானா 100 கிராமை 10 லிட்டர் தண்ணீருடன் கலந்து தெளிக்கவும்.
கருப்பு செதில் புச்சி: வெர்டிசீலியம் லகானி 100 கிராமை 10 லிட்டர் தண்ணீருடன் கலந்து தெளிக்கவும்.

சிவப்பு வேரழுகல்: டிரைக்கோடெர்மா விரிடி 100 கிராமை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்

இலைப்புள்ளி நோய்: சூடோமோனஸ் புளூரசன்ஸ் 100 கிராமை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்

**அறுவடை** : நடவு செய்ததிலிருந்து 6 -7 வருடங்களில் மகசூல் கொடுக்க துவங்கும்.

**மகசூல்** : மரம் ஒன்றிற்கு 2 - 3 கிலோ உலர்ந்த கிராம்பு கிடைக்கும்

| பொதுப்பெயர் : | அறிவியல் பெயர் : | குடும்பம் : |
|---|---|---|
| **சர்வ சுகந்தி** | **பைமென்டா டையாகா** | **மிரிஸ்டேசியே** |

**மண் மற்றும் தட்பவெப்ப நிலை** : நல்ல வடிகால் வசதி கொண்ட அங்கக வளம் மிக்க செம்பொறை மண் சர்வ சுகந்தி சாகுபடிக்கு ஏற்றது 27° செல்சியஸ் வெப்பநிலை உள்ள பகுதிகளில் நன்கு வளரும்.

**மழையளவு** : 1500 - 2000 மி.மீ

**பருவம்** : ஜூன் - ஜூலை

**நடவுக்குழி அளவு** : 30 செ.மீ நீளம், 30 செ.மீ. அகலம், 30 செ.மீ ஆழம்

**நடவுக்குழி தயார் செய்தல்** : 10 கிலோ தொழு உரத்துடன் 50 கிராம் அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போ பாக்டீரியத்தை கலந்து இட்டு குழியின் மத்தியில் நாற்றினை நடவு செய்ய வேண்டும்.

**இடைவெளி** : 6 x 6 மீட்டர்



## ஊட்டச்சத்து மேலாண்மை

(பரிந்துரைக்கப்பட்ட உரங்களை இரு சம பாகமாக பிரித்து மே - ஜூன் மற்றும் நவம்பர் - டிசம்பர் மாதங்களில் இட வேண்டும்

| வயது | கிராம் / மரம் | | |
|---|---|---|---|
| | தழை | மணி | சாம்பல் |
| முதல் வருடம் | 20 | 180 | 50 |
| 15 வயதுக்கு மேல் | 300 | 250 | 750 |

**நீர் நிர்வாகம்** : ஒரு நாளைக்கு 8 லிட்டர் நீர் தேவைப்படும், கோடை காலங்களில் நீர் பாய்ச்சுதல் அவசியமாகும்.

**அறுவடை** : நடவு செய்ததிலிருந்து 6 வருடத்தில் அறுவடை செய்யலாம்.

**மகசூல்** : மரம் ஒன்றுக்கு 20 - 25 கிலோ உலர்ந்த பழங்கள் மற்றும் 5 - 8 கிலோ இலை-கிடைக்கும்.

0.7 - 2.9% எண்ணெய் - உலர்ந்த இலைகளிலிருந்தும், 0.35 - 1.25% எண்ணெய் - பச்சை இலைகளிலிருந்தும் கிடைக்கும்.

| | | |
|---|---|---|
| பொதுப்பெயர் : **புளி** | அறிவியல் பெயர் : **டேமரிண்டஸ் இன்டிகஸ்** | குடும்பம் : **சிசால்பினீயேசியே** |

**மண் மற்றும் தட்பவெப்ப நிலை** : தரங்குறைந்த, அரிக்கப்பட்ட மணல், உப்பு மற்றும் கார மண் வகை உள்ளிட்ட அனைத்து மண் வகைகளிலும் வளரும். $25^{\circ}$ - $35^{\circ}$ செல்சியஸ் வெப்பநிலை உள்ள பகுதிகளில் நன்கு வளரும்

**மழையளவு** : 750 - 1900 மி.மீ

**பருவம்** : ஜுன் - டிசம்பர்

**நடவுக்குழி அளவு** : 1 மீட்டர் நீளம், 1 மீட்டர் அகலம், 1 மீட்டர் ஆழம்

**நடவுக்குழி தயார் செய்தல்** : குழிகளின் மேல் மண்ணோடு 10 கிலோ தொழு உரத்தை கலந்து நிரப்பி நாற்றினை நடவு செய்ய வேண்டும்.

**இடைவெளி** : 8 X 8 மீட்டர்



### ஊட்டச்சத்து மேலாண்மை

(பரிந்துரைக்கப்பட்ட உரங்களை இரு சம பாகமாக பிரித்து மே - ஜுன் மற்றும் நவம்பர் - டிசம்பர் மாதங்களில் இட வேண்டும்

ஒரு மரத்திற்கு 25 கிலோ தொழு உரம்,
2 கிலோ வேப்பம் புண்ணாக்கு,
250 கிராம் தழைச்சத்து, 150 கிராம் மணிச்சத்து
மற்றும் 250 கிராம் சாம்பல் சத்து இட வேண்டும்.

**நீர் நிர்வாகம்** : ஏழு நாட்களுக்கு ஒருமுறை நீர் பாய்ச்சுதல் வேண்டும்.

**ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு** : இலை தின்னும் புழு : பிவோயா பேசியானா 100 கிராமை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
சாம்பல் நோய் : சூடோமோனஸ் புளோரசன்ஸ் 100 கிராமை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

**அறுவடை** : நட்ட நான்கு வருடத்திலிருந்து காய்க்க ஆரம்பிக்கும். ஒன்பது வருடத்திலிருந்து நல்ல மகசூல் கிடைக்கும்.

**மகசூல்** : 150 - 200 கிலோ ஒரு மரத்திற்கு அறுவடை செய்யலாம்.

| பொதுப்பெயர் : | அறிவியல் பெயர் : | குடும்பம் : |
|---|---|---|
| காபி | காபியா அராபிகா | ருபியேசியே |

**மண் மற்றும் தட்பவெப்ப நிலை** : மண்ணின் கார அமிலத் தன்மை 4.5 முதல் 6.5 உடைய அதிக ஆழத்தன்மையுடைய அங்ககச் சத்து நிறைந்த மண் வகை ஏற்றது.

**மழையளவு** : 1600 – 2500 மி.மீ

**பருவம்** : ஜுன் – டிசம்பர்

**நடவுக்குழி அளவு** : 45 செ.மீ நீளம், 45 செ.மீ. அகலம், 45 செ.மீ ஆழம்

**நடவுக்குழி தயார் செய்தல்** : மண்ணோடு தொழு உரத்தை கலந்து நிரப்பி நாற்றினை நடவு செய்ய வேண்டும்.

**இடைவெளி** : 2.5 x 2.5 மீட்டர்

## ஊட்டச்சத்து மேலாண்மை

(பரிந்துரைக்கப்பட்ட உரங்களை இரு சம பாகமாக பிரித்து மே – ஜுன் மற்றும் நவம்பர் – டிசம்பர் மாதங்களில் இட வேண்டும்

| இனங்கள் | பூப்பதற்கு பின் |
|---|---|
| 1 எக்டருக்கு 1 டன்னுக்கு குறைவான மகசூல் தரக்கூடிய செடிகளுக்கு | 80:60:80 |



**நீர் நிர்வாகம்** : மார்ச், ஏப்ரல் மாதங்களில் தெளிப்பு நீர் மூலம் நீர் பாசனம் செய்வதால் பூக்கள் மலர ஆரம்பிக்கும்.

**ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு** : வெள்ளைத் தண்டு துளைப்பான் மற்றும் காய் துளைப்பான் – பிவோரியா பேசியானா 100 கிராமை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

துரு நோய் மற்றும் வேரழுகள் – சூடோமோனஸ் புளோரசன்ஸ் மற்றும் டிரைக்கோடெர்மா விரிடி 100 கிராமை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

**அறுவடை** : அறுவடை நவம்பர் மாதம் தொடங்கி பிப்ரவரி மாதம் வரை இருக்கும். நட்ட 3 வது வருடம் அறுவடை செய்யலாம்.

**மகசூல்** : செடி ஒன்றுக்கு 1 கிலோ உலர்ந்த காபி கொட்டை கிடைக்கும்.

| பொதுப்பெயர் : | அறிவியல் பெயர் : | குடும்பம் : |
|---|---|---|
| **தென்னை** | **காக்கஸ் நியுசிபெரா** | **அரிகேசியே** |

**மண் மற்றும் தட்பவெப்ப நிலை** : 5.2 - 8 வரை கார அமில தன்மை கொண்ட நல்ல வடிகால் வசதியுடைய மண் வகைகளில் நன்கு வளரும்.

**மழையளவு** : 600 - 900 மி.மீ

**பருவம்** : ஜுன் - டிசம்பர்

**நடவுக்குழி அளவு** : 1 மீட்டர் நீளம், 1 மீட்டர் அகலம், 1 மீட்டர் ஆழம்

**நடவுக்குழி தயார் செய்தல்** : நடவுக்குழி தயார் செய்தல் நன்கு மக்கிய தொழு உரத்துடன் 100 கிராம் அசோஸ்பைரில்லம் கலந்து இட்டு குழியின் மத்தியில் நாற்றினை நடவு செய்ய வேண்டும்.

**இடைவெளி** : 7.5 x 7.5 மீட்டர்

## ஊட்டச்சத்து மேலாண்மை

(பரிந்துரைக்கப்பட்ட உரங்களை இரு சம பாகமாக பிரித்து மே - ஜுன் மற்றும் நவம்பர் - டிசம்பர் மாதங்களில் இட வேண்டும்

| வயது | தொழு உரம் (கிலோ) | கிராம் / மரம் | | |
|---|---|---|---|---|
| | | தழை | மணி | சாம்பல் |
| 1 | 10 | 308 | 500 | 480 |
| 2 | 20 | 616 | 1000 | 960 |
| 3 | 30 | 924 | 1500 | 1440 |
| 4 | 40 | 1023 | 200 | 1920 |
| 5 வருடம் முதல் | 50 | 1230 | 2000 | 1920 |



**நீர் நிர்வாகம்** : ஒரு மரத்திற்கு 1 நாளைக்கு 80-100 லிட்டர் தண்ணீர் தேவைப்படும். வயது மற்றும் காலநிலைகளுக்கேற்ப நீர் பாய்ச்சுதல் அவசியமாகும்.

**ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு** : வண்டினங்கள்- மெட்டரைசியம் அனிசோபிலியே 100 கிராம் 100 லிட்டர் தண்ணீருடன் கலந்து தெளிக்கவும். நோய்கள் - சூடோமோனஸ் புளோரசன்ஸ் மற்றும் டிரைக்கோடெர்மா விரிடி ஒவ்வொன்றும் 100 கிராமை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

**அறுவடை** : 5 - 6 வருடம்

**மகசூல்** : ஒரு மரத்திற்கு 60 முதல் 80 காய்கள் மகசூல் கிடைக்கும்.

| பொதுப்பெயர் : | அறிவியல் பெயர் : | குடும்பம் : |
|---|---|---|
| எலுமிச்சை | சிட்ரஸ் ஸ்பீசிஸ் | ருட்டேசியே |

**மண் மற்றும் தட்பவெப்ப நிலை** : நல்ல வடிகால் வசதி கொண்ட இருமண் பாங்கான குறுமண் நிலம் ஏற்றது. வெப்பம் மற்றும் மித வெப்ப மண்டல பகுதிகளில் நன்கு வளரும்.

**மழையளவு** : 600 – 1000 மி.மீ

**பருவம்** : ஜீன் – டிசம்பர்

**நடவுக்குழி அளவு** : 1 மீட்டர் நீளம், 1 மீட்டர் அகலம், 1 மீட்டர் ஆழம்


**நடவுக்குழி தயார் செய்தல்** : நன்கு மக்கிய தொழு உரத்துடன் 100 கிராம் அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போ பாக்டீரியத்தை கலந்து இட்டு குழியின் மத்தியில் நாற்றினை நடவு செய்ய வேண்டும்.

**இடைவெளி** : 6 X 6 மீட்டர்

## ஊட்டச்சத்து மேலாண்மை

(பரிந்துரைக்கப்பட்ட உரங்களை இரு சம பாகமாக பிரித்து மே – ஜுன் மற்றும் நவம்பர் – டிசம்பர் மாதங்களில் இட வேண்டும்

| உரத்தின் பெயர் | முதல் வருடம் | வருடா வருடம் அதிகரிப்பு | 6 வருடத்திற்கு பிறகு |
|---|---|---|---|
| தொழு உரம் | 10 கிலோ | 5 கிலோ | 30 கிலோ |
| தழை சத்து | 200 கிராம் | 100 கிராம் | 600 கிராம் |
| மணி சத்து | 100 கிராம் | 25 கிராம் | 200 கிராம் |
| சாம்பல் சத்து | 100 கிராம் | 40 கிராம் | 300 கிராம் |



**நீர் நிர்வாகம்** : தேவைக்கேற்ப நீர் பாய்ச்சுதல் அவசியமாகும்

**ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு** : வெள்ளை ஈ – வெர்டிசீலியம் லகானி 100 கிராமை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
தண்டு துளைப்பான் – பிவோ'யா பேசியான 100 கிராமை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

**அறுவடை** : நட்ட மூன்றாவது வருடத்திலிருந்து காய்க்க ஆரம்பிக்கும்.

**மகசூல்** : 50 – 80 கிலோ ஒரு மரத்திற்கு மகசூல் கிடைக்கும்.

| பொதுப்பெயர் : | அறிவியல் பெயர் : | குடும்பம் : |
|---|---|---|
| **சில்வர் ஓக்** | **கிரிவில்லியா ரொபஸ்டா** | **புரோடியேசியே** |

| | | |
|---|---|---|
| **மண் மற்றும் தட்பவெப்ப நிலை** | : | வண்டல் மண் மற்றும் களி மண்ணில் நன்கு வளரும்.<br>கடல் மட்டத்திலிருந்து 2300 மீட்டர் வரை நன்கு வளரும்.<br>$25^{\circ}$ - $31^{\circ}$ செல்சியஸ் வெப்பநிலை உள்ள பகுதிகளில் நன்கு வளரும். |
| **மழையளவு** | : | 600 - 1000 மி.மீ |
| **பருவம்** | : | ஜுன் - டிசம்பர் |
| **நடவுக்குழி அளவு** | : | 30 செ.மீ நீளம், 30 செ.மீ. அகலம், 30 செ.மீ ஆழம் |
| **நடவுக்குழி தயார் செய்தல்** | : | மண்ணோடு தொழு உரத்தை கலந்து நிரப்பி<br>நாற்றினை நடவு செய்ய வேண்டும். |
| **இடைவெளி** | : | 3 x 3 மீட்டர் |







| | | |
|---|---|---|
| **நீர் நிர்வாகம்** | : | தேவைக்கேற்ப நீர் பாய்ச்சுதல் அவசியமாகும் |
| **ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு** | : | பொதுவாக சில்வர் ஓக் மரத்தினை நோய்கள்<br>மற்றும் பூச்சிகள் தாக்குவது குறைவு. |
| **அறுவடை** | : | 10 வருடத்திலிருந்து 15 வருடத்திற்குள் அறுவடை செய்யலாம். |
| **மகசூல்** | : | ஒரு மரம் 1 டன்னிலிருந்து 1.25 டன் வரை மகசூல் கிடைக்கும் |

| பொதுப்பெயர் : | அறிவியல் பெயர் : | குடும்பம் : |
| --- | --- | --- |
| **மிளகு** | **பைபர் நைகிரம் L** | **பைப்ரேசியே** |

**இரகங்கள்** : பன்னியூர் 1, 2, 3, 4, 5, 6, 7 மற்றும் கரிமுண்டா

**மண் மற்றும் தட்பவெப்ப நிலை** : குறைந்த மற்றும் அதிக உயரமான இடங்களில் குறைந்த நிழலில் வளரக் கூடியது.

**மழையளவு** : 150 - 250 மி.மீ

**பருவம்** : ஜூன் - டிசம்பர்

**நடவுக்குழி அளவு** : 50 செ.மீ நீளம், 50 செ.மீ. அகலம், 50 செ.மீ ஆழம்

**நடவுக்குழி தயார் செய்தல்** : முள் முருங்கை, சீமை கொன்னை மற்றும் சில்வர் ஓக், சூபாபுல் ஆகியவை மிளகு பற்றி வளரப் பயன்படுத்தலாம். படர பயன்படும் மரங்களிலிருந்து 15 செ.மீ. தூரம் தள்ளி நடவுக்குழிகளை தயார் செய்தல் வேண்டும்.

### ஊட்டச்சத்து மேலாண்மை

(பரிந்துரைக்கப்பட்ட உரங்களை இரு சம பாகமாக பிரித்து மே, ஜூன் மற்றும் நவம்பர், டிசம்பர் மாதங்களில் இட வேண்டும்)

ஒரு கொடிக்கு 10 கிலோ மக்கிய தொழு எருவுடன் 100 கிராம் தழைச்சத்து. 40 கிராம் மணிச்சத்து மற்றும் 140 கிராம் சாம்பல் சத்து தரக்கூடிய இரசாயன உரங்கள் நட்ட ஒரு மாதம் கழித்து கொடி ஒன்றிற்கு 10 கிராம் அசோஸ்பைரில்லம் 10 கிராம் பாஸ்போபாக்டீரியா + 100 கிராம் வேம்பு இடவேண்டும்.



**நீர் நிர்வாகம்** : டிசம்பர் - மே மாதங்களில் 10 நாட்களுக்கு ஒரு முறை நீர் விடவேண்டும்.

**களைக்கட்டுப்பாடு பின் செய் நேர்த்தி** : ஜூன் - ஜூலை மற்றும் அக்டோபர் நவம்பர் மாதங்களில் இரண்டு முறை களை எடுக்கவேண்டும்.

**ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு** : வெள்ளை ஈ, இலைப்பேன், மாவு மற்றும் செதில் பூச்சிகள் வெர்டிசீலியம் லகானி 100 கிராமை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
துரித வாடல் நோய் - சூடோமோனஸ் புளோரசன்ஸ் மற்றும் டிரைக்கோடெர்மா விரிடி ஒவ்வொன்றும் 100 கிராமை 2 கிலோ தொழு உரத்துடன் கலந்து ஒவ்வொரு செடிக்கும் வைக்க வேண்டும்.

**அறுவடை** : நட்ட மூன்றாவது வருடத்திலிருந்து காய்க்க ஆரம்பிக்கும்.

**மகசூல்** : ஒரு வருடத்திற்கு 1 கொடியிலிருந்து 2 முதல் 3 கிலோ உலர்ந்த மிளகு கிடைக்கும்.

| பொதுப்பெயர் : ரோஸ்மேரி | அறிவியல் பெயர் : ரோஸ்மெரீனஸ் அபிசினாலிஸ் | குடும்பம் : லேமினேசியே |
|---|---|---|

| | | |
|---|---|---|
| **இரகங்கள்** | : | ஊட்டி 1 |
| **மண் மற்றும் தட்பவெப்ப நிலை** | : | கார அமிலத்தன்மை 5.5 முதல் 7.0 வரை கொண்ட நல்ல வடிகால் வசதி கொண்ட மண் உகந்தது |
| **மழையளவு** | : | 750 - 1000 மி.மீ |
| **பருவம்** | : | ஜுன் - டிசம்பர் |
| **வளரியல்பு** | : | கடல் மட்டத்திலிருந்து 700 மீட்டருக்கு மேல் வளரக்கூடிய பயிராகும். |
| **விதையளவு** | : | ஏக்கருக்கு 12000 வேர் விட்ட செடிகள் |
| **நடவு முறை** | : | 60 செ.மீ நீளம், 60 செ.மீ. அகலம் என்ற இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். |
| **நிலம் தயார் செய்தல்** | : | மண்ணை 2 அல்லது 3 முறை உழுது<br>60 x 60 செ.மீ. இடைவெளியில் பார்கள் அமைக்க வேண்டும். |

**ஊட்டச்சத்து மேலாண்மை**

ஒரு ஏக்கருக்கு 20 டன் மக்கிய தொழு எரு, 400 கிலோ வேப்பம்புண்ணாக்கு, 2 டன் மண் புழு உரம், 5 கிலோ அசோஸ்பைரில்லம், 5 கிலோ பாஸ்போபாக்டீரியத்தை அடி உரமாக இட வேண்டும்.



| | | |
|---|---|---|
| **நீர் நிர்வாகம்** | : | பயிர் நடும்போது, பயிர் நட்ட 3 ஆம் நாள் மற்றும் வாரம் ஒருமுறை நீர் பாய்ச்ச வேண்டும். |
| **களைக்கட்டுப்பாடு பின் செய் நேர்த்தி** | : | நட்ட பிறகு அவ்வப்போது களை எடுக்கவேண்டும். |
| **ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு** | : | இலைப்பேன் - வெர்டிசீலியம் லகானி 100 கிராமை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.<br>வேர் அழுகல் - சூடோமோனஸ் புளோரசன்ஸ் மற்றும் டிரைக்கோடெர்மா விரிடி ஒவ்வொன்றும் 5 கிலோ 100 கிலோ தொழு உரத்துடன் கலந்து ஒவ்வொரு செடிக்கும் வைக்க வேண்டும். |
| **அறுவடை** | : | நட்ட ஆறாவது மாதத்திலும், ஒவ்வொரு மூன்று மாதத்திற்கு ஒரு முறையும் அறுவடை செய்யலாம். |
| **மகசூல்** | : | ஏக்கருக்கு 5 முதல் 6 டன் பச்சை இலை கிடைக்கும்.<br>40 முதல் 45 கிலோ வாசனை எண்ணெய் கிடைக்கும். |


MONTFORT
















**KRISHI VIGYAN KENDRA – MYRADA**

272, Perumal Nagar, Puduvalliampalayam Road, Kalingiyam (Po),
Gobichettipalayam, Erode (Dt) - 638 453, Tamilnadu.

**भाकृअनुप-कृषि तकनीकी अनुप्रयोग अनुसंधान संस्थान (अटारी)**
**ICAR-Agricultural Technology Application Research Institute (ATARI)**
**Zone X / क्षेत्र 10, क्रीडा परिसर / CRIDA Campus, संतोषनगर / Santoshnagar, हैदराबाद / Hyderabad-500059**
**An ISO 9001:2015 Certified Institute**